குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கூட பாதுகாப்புத்தர முடியாத துப்புக்கெட்ட –

கேடு கெட்ட த.வெ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

வட சென்னையில் பல்லாயிரவர் திரண்ட மகளிர் அணி ஆர்ப்பாட்டத்தில்

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. உறுதி!



சென்னை, நவ.1-

“குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கூட பாதுகாப்புத் தர முடியாத துப்புக் கெட்ட, கேடு கெட்ட த.வெ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வடசென்னையில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட கழக மகளிர் அணி ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப் பின்மை, விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக் கள் விரோதச் செயல்பாடுகளைக் கண்டித்து, திமுக மகளிர் அணியின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணா நிதி எம்.பி, விரைவில் வரக்கூடிய மாற்றத்திற் கான வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கி றேன் என்று கூறி ஆற்றிய உரை வருமாறு:-

பெண்கள் நினைத்தால் செய்ய முடியாதது என்று ஒன்றுமே இல்லை.இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெண்கள் நினைத்து விட்டார்கள். தெரியாமல் வாக்களித்துவிட் டோம். தவறாகிவிட்டது. அதனால் நீங்கள் இல்லை, உங்களைச் சொல்லவில்லை. நீங் கள் அந்தத் தவறையெல்லாம் செய்ய மாட்டீர் கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

வாக்களித்தவர்கள் இன்று ஒவ்வொரு நாளும் தெரியாமல் செய்துவிட்டோமே, தவறு செய்துவிட்டோமே என்று அந்தப் பெண்களும், அந்த குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களும், இளைஞர்களும் வருத்தப்பட்டுக்கொண்டிருக் கக்கூடிய சூழலில் பெண்கள் இன்று ஒன்று கூடி விட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூ டிய பெண்கள் இன்று தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கிவிட்டார்கள். அதனால் நிச்ச யம் மாற்றம் வரும், விரைவில் மாற்றம் வரும்.

ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் பெரிதாகப் பிரச்சாரம் செய்யாவிட்டாலும், செய்த நேரத்திலெல்லாம் “இது நாடா? காடா?” என்று கேட்டார் ஜோசப் விஜய் அவர்கள். அன்புத் தம்பி விஜய் கேட்டார், sweet bro விஜய் கேட்டார்.

மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த விஜய்!

சரி, இதைவிட இவ்வளவு நல்ல ஆட்சி நடக்கி றதே! இதைவிட ஒருவர் நல்ல ஆட்சி கொடுக்க வேண்டும் என்கிறாரே, இதுவே நன்றாக இல் லையே என்கிறாரே! இந்தியாவிலேயே சிறப் பான ஆட்சி இந்த ஆட்சியாக இருக்கிறதே! நம் முடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சி மிகச் சிறப்பான ஆட்சியாக இருக்கிறதே! எல்லாரும் வந்து இப்படிப்பட்ட ஆட்சி என்று பாராட்டக்கூ டிய அளவிற்கு இருக்கிறதே, இதைவிடச் சிறப் பாக ஓர் ஆட்சி செய்துவிட முடியுமா, அது என்ன வென்று பார்த்துவிடுவோம் என்று நினைத்து வாக்களித்தார்களா என்று தெரியவில்லை.

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, இதை விட பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுப்போம் என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றி ஆட் சிப் பொறுப்பிற்கு வந்தார்.

என்ன திரைப்படம் என்று தெரியவில்லை, ஒரு திரைப்படம். விஜய் நடிகராக இருந்தபொ முது வந்த ஒரு திரைப்படம். நான் நிறைய அவ ருடைய திரைப்படங்களைப் பார்த்ததில்லை. ஆனால் தொலைக்காட்சியில் ஒரு காட்சி பார்த்தி ருக்கிறேன். யாரோ ஒருவன் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துகொள்வான், அவனை அடித்து ஒரு பாலத்திற்கு அடியில் கட்டி வைத்திருப்பார். என்ன திரைப்படம்? ‘தெறி’யா? சரி. அதேபோல தெறிக்க விட்டுவிடுவார் என்று நினைத்தார்கள், அல்லவா?

ஆனால் இன்று அதேபோல அவர் இந்த பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுப டக்கூடியவர்கள், பாலியல் வன்கொடுமையில் ஈடுபடக்கூடியவர்களை ஏதாவது பாலத்திற்கு அடியில் கட்டி வைக்கவேண்டும் என்று நினைத் தால், முதலில் அவருடைய கட்சியினரைத் தான் கட்ட வேண்டும். நம் தலைவர் நிறைய பாலங்களைக் கட்டி வைத்திருக்கிறார். அத னால் கவலையில்லையில்லாமல் கட்டலாம்.

த.வெ.க.வினரின் குற்றப்பட்டியல்!

இப்பொழுதே 20க்கும் மேல் பெண்களுக்கு எதிரான குற்றங்களில், வன்முறைகளில் ஈடுபட் டிருப்பது த.வெ.கவைச் சார்ந்த நிர்வாகிகள் தாம். சில நேரங்களில் சில கட்சிகளில் குற்றம் செய்தவர்கள் ஆளுங் கட்சியில் போய்ச் சேர்ந்து விடுவார்கள். ஒரு கட்சி ஆளுங்கட்சியாக இருக் கும்போது சேர்ந்தால் அது பாதுகாப்பாக இருக் கும், கைது செய்ய மாட்டார்கள் என்று நினைப்பார்கள். ஆனால் த.வெ.கவில் குற்றம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர்கள் எல்லாம் போய்ச் சேர்ந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

பட்டியல் படிக்கலாம், ஆனால் முடிய வில்லை. அந்த அளவிற்குப் பாருங்கள், இவ்வ ளவு பெரிய பட்டியல். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு - நான்கு பக்கத்திற்கு த.வெ.க நிர்வாகிகள் செய்திருக்கக்கூடிய குற்றங்கள்.

குழந்தை - சில நாட்களுக்கு முன்னால் எண்ணூரில் இரண்டரை வயதுக் குழந்தை. அதற்குப் பிறகு அந்தக் குழந்தையைக் காப்பாற் றுவதற்காக அந்தக் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய ஒரு நிலை. இரண்டு மூன்று அறுவை சிகிச்சைகள் அந்தக் குழந்தை யின் உயிரைக் காப்பாற்றுவதற்காகச் செய்தி ருக்கிறார்கள்.

இப்படி மனிதத்தன்மையே இல்லாமல் இரண்டரை வயதுக் குழந்தையைப் பாலியல் வன்கொடுமை செய்யக்கூடியவர்களை எல் லாம் நிர்வாகிகளாக வைத்துக்கொண்டிருக்கக் கூடிய ஓர் இயக்கம் இருக்கிறது என்றால், ஒரு கட்சி - அது கட்சியா என்று எனக்குத் தெரிய வில்லை. அது த.வெ.க தான்.

அதுமட்டுமில்லை, தூத்துக்குடியில் மாவட்ட த.வெ.க இளைஞரணி அமைப்பாளர் பாலமுரு கன், வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பெண்ணை வன்கொடுமை செய்து கொலை மிரட்டல் விடுத்து அந்தப் பெண்ணைப் பயமு றுத்தியிருக்கிறார்கள்.

சேலம் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் 50க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாசப் புகைப் படங்கள் எடுத்து அவர்களைத் தொடர்ந்து மிரட் டிக்கொண்டிருந்திருக்கிறார்.

ராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த கட்சி நிர் வாகி ஜெயபால், தூத்துக்குடி பகுதியைச் சேர்ந்த பாலமுருகன்இவர்கள் பாலியல் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கக்கூடிய சட்ட மன்ற உறுப்பினரே குற்றவாளிகளுக்கு ஆதர வாக இருந்தார் என்று சொல்லி அந்தப் பெண்ணே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கி றார். ஆனால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கி றார்? “அண்ணனாக இருக்கிறேன்” என்று சொன்னாரே, இல்லையா? “தம்பி” என்றாரல் லவா? என்ன செய்தார்? சட்டமன்ற உறுப்பின ரைப் பாதுகாப்பதற்காகச் சட்டமன்ற உறுப்பி னரை விட்டு அந்தப் பெண்ணை மிரட்டி வழக்கைத் திரும்பப் பெற வைக்கிறார்கள்.

ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளராக இருந்த வேம்புலி ஒரு பெண் வீட்டிற்குள் புகுந்து பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார்.

அரக்கோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சசிகுமார் கட்சியில் பதவி வாங்கித் தருவதாகச் சொல்லி அந்தப் பெண்ணை வன்கொடுமை செய்திருக்கிறார்.

ராணிப்பேட்டை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் விஜய் மோகன் பெண் ஒருவருக் குப் பதவி வாங்கித் தருவதாகச் சொல்லி பாலி யல் வன்கொடுமை செய்திருக்கிறார்.

ஆர்.கே. நகர் பகுதிப் பொறுப்பாளர் பாம்பு தினேஷ் 11 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்துக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

திருச்செந்தூர் பகுதி நிர்வாகிகளான பிரைட் டர் மற்றும் ரூஸ்வெல்ட் இரண்டு பேரும் தங் கள் சொந்தக் கட்சியைச் சேர்ந்த பெண் நிர்வாகி யிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்டு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

திருவள்ளூர் பகுதி நிர்வாகி குட்டி, தன் சொந் தக் கட்சியில் இருக்கக்கூடிய பெண் நிர்வாகிக்குப் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

சிவகங்கை பகுதி நிர்வாகிகளான மகாரா ஜன், ராபின், ஹாரிஸ் - அங்கே இருக்கக்கூடிய அதே கட்சியில் இருக்கக்கூடிய த.வெ.க. வினுடைய பெண் நிர்வாகிக்குத் தொல்லை கொடுத்து அத்துமீறலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

135 கிலோ மெத்தபெட்டமைன் – கஞ்சா, குட்கா கடத்தல்!

இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் சொல்லிக்கொண்டே இருக்கலாம். அதைவிட மோசமாக 135 கிலோ மெத்தபெட்டமைன் - ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால்? என்ன சொன்னார் விஜய் “போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கப் போகி றேன்” என்று.

இப்படிச் சொல்லிவிட்டு அவருடைய கட்சி யில் இருக்கக்கூடியவரே 135 கிலோ மெத்தம் பெட்டமைன் வீட்டில் வைத்திருக்கிறார்.

இது தவிரக் கஞ்சா. பல நிர்வாகிகள் கையிலி ருந்து, வீட்டிலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டிருக் கிறது. நிறைய பேர் இதையே தொழிலாக வைத் திருப்பவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் பிளாக் டிக்கெட் விற்றுக்கொண்டிருந்தார்கள் என்று, சொன்னோம் அவர்கள் வேறு ஏதோ விற்றுக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இப்படி அந்தக் கட்சியில் இருக்கக்கூடிய நிர் வாகிகள் குட்கா கடத்தல், கஞ்சா கடத்தல், போதைப்பொருள் கடத்தலில் ஈடுப்பட்டிருக்கி றார்கள். இவற்றைத் தன்னுடைய தொழிலாக வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களைத் தான் கட்சியில் சேர்த்திருக்கிறார். அதைத் தாண்டி பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பலர் அவர்களுடைய கட்சி யில் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

700 கொடூரக் கொலைகள்! 400 பாலியல் வன்முறைகள்!

இவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்குப் பாதுகாப் பான தமிழகத்தை உருவாக்குவோம் என்று சொல்லிவிட்டு வந்தார்களல்லவா ஆட்சிப் பொறுப்புக்கு? தமிழ்நாட்டில் இவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு 700 கொடூர குற்றங் கள்! பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 400! இதுதான் பாதுகாப்பான தமிழகத்தை உருவாக்கக்கூடிய லட்சணமா?

நான் கேட்கிறேன், முதலமைச்சருக்குக் கீழ் தானே காவல்துறை வருகிறது? இந்தக் காவல் துறை என்ன செய்கிறது? பாவம் அவர்களைச்

நான் ஒன்றை மட்டும் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். குழந்தைகளுக்கு நீங்கள் மோதிரம் எல்லாம் போட வேண்டாம். அந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள். அண்ணன் சீரில் புடவை உட்பட என்னென்னவோ பொருட்களை கொடுக்கும் விஜய் அவர்களே! நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன் தயவுசெய்து ‘பெப்பர் ஸ்ப்ரே’ கொடுங்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு பெண்ணுக்கும் தயவு செய்து இதையாவது கொடுங்கள்!

சொல்லித் தவறில்லை. அவர்களுக்கு ஆட்சியா ளர்கள் கொடுக்கக்கூடிய ஒரு வேலை என்ன வென்றால், திமுக என்ன கூட்டம் நடத்துகிறது கவனித்து அனுமதி கொடுக்காதே. திமுக என்ன செய்கிறது? எதிர்க்கட்சிகள் என்ன செய்கின் றன? யார் டுவிட்டரில் (Twitter) என்ன பதிவிடுகி றார்கள் என பார்த்து கைது செய்!

மேடையில் யார் என்ன பேசுகிறார்கள், ஒரு வார்த்தை தவறாகச் சொல்லிவிட்டால் அல்லது அவர்களுக்குப் பிடிக்காத செய்தி எதையாவது மேடையில் சொல்லிவிட்டால், கைது செய்! என்று உத்தரவிட்டிருக்கிறார்கள் அதனால் காவல்துறையினரின் இப்போதைய முழு நேர வேலை என்ன? நம் பின்னாடி சுற்றுவதுதான். இப்போது தமிழ்நாட்டில் பாதுகாப்பாக இருப்பது திமுககாரர்கள்தான், ஏனென்றால் எப்பொழுது காவல்துரை பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக் கிறது!

கழக மாவட்டச் செயலாளர்கள் மீது பொய் வழக்குகள்!

இதையெல்லாம் தாண்டி நம் மாவட்டச் செய லாளர் இருக்கிறார், நேற்றுக் காலையில் அவ ருக்குத் தொலைபேசியில் அழைக்கிறேன், எடுக்கவில்லை. அழைத்தால் எடுப்பாரே என்று பார்த்தால் அப்புறம் சொன்னார், காவல் நிலை யத்தில் விசாரணையில் அமர்ந்திருந்தேன் என்று. இது வேறு. அனைத்து காவல் நிலை யங்களிலும் நம் மாவட்டச் செயலாளரை, கட்சி நிர்வாகிகளை அழைத்து அவர்களுக்கு ஒரு தேநீர் வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு ஒரு விசாரணை வைக்க வேண்டும். அதுவும் முடி யவில்லையா, ஏதாவது ஒரு வழக்குத் தொடுத்துக் கைது செய்து சிறையில் வைக்க வேண்டும்.

சிறைச்சாலைகளில் கைதிகள் தப்பிச் செல்கிறார்கள்!

இதில் காவல்துறை பிஸியாக (பரபரப்பாக) இருப்பதால் சிறையில் கைதிகள் தப்பிச் செல் வது தெரியாமல் போய்விடுகிறது. இதுவரை - இப்போது 17 கைதிகளைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். இதுவரை இவர்கள் ஆட்சியில் 50க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றிருக்கிறார்கள்.

இப்போது சிறைச்சாலை எப்படி ஆகிவிட்டது என்றால் நீங்கள் உள்ளே போகலாம், நினைத் தால் வெளியே வந்துவிடலாம். பிறகு கொஞ்சம் தேடிப் பிடித்துப் பாதிப் பேரை பிடிப்பார்கள், மீதிப் பேரை விட்டுவிடுவார்கள்.

இதுதான்தமிழ்நாட்டில் இன்று சட்டம் ஒழுங்கு இருக்கக்கூடிய நிலை. குழந்தை களுக்குப் பாதுகாப்பு இல்லை. வீட்டில் இருக்கக் கூடிய பெண்களுக்குப் பாதுகாப்பில்லை, ஒரு பெண் வீட்டின் வாசலில் அமர்ந்திருக்கிறார். அந்தப் பெண்ணைக் கொலை செய்கிறார்கள்.

இத்தனை ஆண்டுகளாகப் பெண்கள் வெளியே வர வேண்டும், படிக்க வேண்டும், வேலைக்குப் போக வேண்டும், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று பாடுபட்ட இயக்கம் திராவிட இயக்கம். “நீ நினைத்தபொழுது வெளியே வா” என்றுதான் விடியல் பயணத்தை நம்முடைய முதலமைச்சராக இருந்த அண் ணன் தளபதி அவர்கள் அறிவித்தார்கள். இன்று நீங்கள் பேருந்தில் இலவச பயணச்சீட்டு கொடுத் தால்கூட யோசிக்கிறார்கள் பெண்கள் வெளியே வருவதற்கு.

ஒரு அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்தேன். “எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள்தான் அம்மா, பெண் பிள்ளைகளெல்லாம் இல்லை. ஆனால் அந்தப் பசங்களை வெளியே அனுப்பு வதற்கே பயமாக இருக்கிறது. நான் முன்னெல்லாம் கேட்க மாட்டேன், எங்கே போகிறாய், எங்கே வருகிறாய், எப்போது வரு வாய் என்று. இப்போது அரை மணிநேரத்திற்கு ஒருமுறை நான் தொலைபேசியில் அழைத்து அந்தப் பிள்ளைகளைக் கேட்கிறேன், எங்கே இருக்கிறாய், நன்றாக இருக்கிறாயா, வெளியே போகாதே என்றெல்லாம்”. என்றார்.

மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழும் தாய்மார்கள்!

ஒவ்வொரு தாயும் தமிழ்நாட்டில் இப்படித் தான் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு பயத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, இளைஞர் களுக்குப் பாதுகாப்பு இல்லை, யாருக்குமே பாது காப்பு இல்லை. என் தூத்துக்குடி தொகுதியில் இரண்டு பெண்களைக் கடத்திச் செல்வதற்காக வீட்டிற்குள் புகுந்து தாய், தந்தை, மகன் மூன்று பேரையும் தாக்கியதில் தாய் சம்பவ இடத்தி லேயே இறந்துவிட்டார்.

இவர்களுடைய நிர்வாகத் திறமை, இவர்க ளுடைய அரசு என்ன லட்சணத்தில் இருக்கிறது என்றால், உயிரோடு கொண்டுபோய் மருத்துவ மனையில் சேர்த்த தந்தை,மிக மோசமாகத் தாக்கப்பட்டிருந்த அவரைக்கூடப் பிழைக்க வைக்க முடியவில்லை. 10 வயது சிறுவனுக்கு இரண்டு விரல்களைக் காணவில்லை. இன்று அந்த மூன்று குழந்தைகளும் அம்மா, அப்பா இரண்டு பேரும் இல்லாமல் அனாதைகளாக்கப் பட்டிருக்கிறார்கள். விஜய் மாமாவிற்கு வாக்களி யுங்கள் என்று சொன்னாரல்லவா? அந்த விஜய் மாமா ஆட்சியில் எத்தனை குழந்தைகள் அனா தைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை குழந்தைகள் பள்ளிக்குச் சென்றுவிட்டுக் வீடு திரும்பி வருவதில்லை?

வீட்டில் இருந்த குழந்தைகளை, ஒரு வயதுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போகிறார் கள். இவர்களுடைய கட்சியினரே தூக்கிக் கொண்டு போய் விற்கிறார்கள்.

குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பு தர முடியாத துப்பற்ற ஆட்சி!

நான் கேட்கிறேன், தேர்தல் நேரத்தில் சொன் னீர்களல்லவா “நண்பாஸ், நண்பீஸ், வீட்டில் போய் அடம் பிடித்து எனக்கு வாக்கு வாங்கித்தா ருங்கள்” என்று? அப்பொழுது அந்தக் குழந்தை களைப் பயன்படுத்தினீர்களா இல்லையா? இன்று அந்தக் குழந்தைகளுக்குக்கூடப் பாது காப்பு தர முடியாமல் துப்பற்ற ஒரு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

இத்தனை குழந்தைகள் காணாமல் போவைதைப் பற்றி கொஞ்சமாவது மனசாட்சி வேண்டாமா? பத்திரிகைகளில் எழுதுகிறார்கள், “Tamil Nadu has become the hub of child traf ficking” என்று. குழந்தைகள் கடத்தப்பட்டு விற் கப்படுவதன் தலைநகரமாகத் தமிழ்நாடு மாறிக்கொண்டிருக்கிறது என்று பத்திரிகைகள் எழுதக்கூடிய அளவிற்கு இன்று தமிழ்நாடு அவ் வளவு மோசமாகிவிட்டது. வீட்டில் குழந்தையை வைத்துக்கொண்டு அமர்ந்திருக்க முடிய வில்லை.

தமிழ்நாடு இருண்ட காலத்திற்குத் தள்ளப்படும்!

இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி இன்று தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கு விரைவில் நாம் ஒரு முடிவு கண்டாக வேண்டும், முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

நான் கூட நினைத்தேன், ஜனநாயக ரீதியாக மக்கள் வாக்களித்து ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தி ருக்கிறார்கள், ஆளட்டும் என்று. ஆனால் இவர் கள் ஆண்டார்கள் என்றால் தமிழ்நாடு இருண்ட காலத்தில் தள்ளப்படும் என்பது தெளிவாகி விட்டது.

எந்த முதலீடும் வரவில்லை. சட்டம் ஒழுங்கு சரியில்லை. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பிள்ளைகளுக்கு எதிர்காலமே இல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் நிர்வா கம் என்று ஒன்று இருக்கிறதா இல்லையா என்று தெரியாத அளவிற்குச் சீரழிந்து கிடக்கக்கூடிய ஒரு நிலையில் இவர்களை வீட் டிற்கு அனுப்புவதைத் தவிர தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேறு வழியில்லை.

விலைவாசிகள் ஏறிவிட்டன!

இங்கே பேசும்போது சொன்னார்கள், ஊரான் வீட்டு நெய்யில் பலகாரம் செய்யாதீர் கள் என்பதில்லை என் வீட்டிலேயே நான் பலகா ரம் செய்ய முடியாது, இனிமேல் ஊரான் வீட்டு நெய்யைப் பற்றி நான் என்ன பேசுவது என்று. விலைவாசி அப்படித்தான் ஆகிவிட்டது. தீபா வளி நிறைய பேர் கொண்டாடுவீர்கள் என்று நினைக்கிறேன்.

தீபாவளி வரைக்கும் காத்திருக்க வேண் டாம், வீட்டில் தினமும் சமைப்பதற்கே வழி யில்லை, அல்லவா? வெங்காயம் வாங்க முடி யாது, தக்காளி வாங்க முடியாது இன்று தினமும் சமைப்பதற்கே முடியவில்லையே!

வெங்காயம் 180 ரூபாய்க்கு விற்கிறது, அரிசி விலை இரண்டு மடங்கு ஆகிவிட்டது. பருப்பு விலை இரண்டு மடங்கு ஆகிவிட்டது. சமையல் எண்ணெய் வாங்காமல் இருந்தாலே நல்லது, அல்லவா? பூங்கோதை சந்தோஷப்படுவார்கள் ஏனென்றால்மருத்துவர்தான் சொல்வார்கள், எண்ணெய் குறைவாகப் பயன்படுத்துங்கள், எண்ணெய் குறைவாகப் பயன்படுத்துங்கள் என்று. இப்போது எண்ணெயே பயன்படுத்த முடியவில்லை. அரிசி வாங்க முடியவில்லை. நியாயவிலைக் கடையில் வேறு அரிசி போடுவ தாகச் சொல்கிறார்கள், சன்னரக அரிசி போடுவ தாக, இருக்கிற அரிசியைப் பாலிஷ் செய்து ஏமாற்றுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் வாழக்கூடிய அளவிற் குக்கூட இல்லாத அளவிற்கு விலைவாசியை உயர்த்தியிருப்பதுதான் அவர்கள் செய்திருக்கக் கூடிய மிகப்பெரிய சாதனை. திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுது நம்முடைய தலை வர் முதல்வராக இருந்தபொழுது தமிழ்நாடு எதைக் கேட்டாலும் தமிழ்நாட்டில்தான் முதலா வதாக இருக்கும். முதலீடாக இருக்கட்டும், வளர்ச்சியாக இருக்கட்டும், எதுவாக இருந்தா லும் கல்வியாக இருக்கட்டும்; சுகாதாரத் துறை யாக இருக்கட்டும், எல்லாவற்றிலும் தமிழ்நாடு தான் முதலில் இருக்கும்.

குழந்தைகளுக்கு தங்க மோதிரம் தேவையில்லை! ‘பெப்பர் ஸ்பிரே’ கொடுங்கள்!

ஆனால் இன்று தமிழ்நாடு எல்லாவற்றிலும் பின்னோக்கி வந்துவிட்டது. ஒருவேளை விஜய் வருத்தப்பட்டாரோ என்னவோ, எல்லாவற்றி லும் தமிழ்நாடு பின்னால்போய்விட்டது, ஏதா வது ஒன்று இரண்டு விஷயத்திலாவது முன் னால் வர வேண்டும் என்று அதனால் கொலை, குற்றங்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் முன்னணிக்கு வந்துவிட்டோம்.

அடுத்து, இந்தியாவிலேயே உணவுப் பொருட்களின் விலைவாசி அதிகமாக இருக்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு என்பதில் முன்னி லைக்கு வந்துவிட்டோம்.

யாரும் எதையும் வாங்க முடியாது. இப்படிப் பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி, மக்கள் அன்றாடம் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கக் கூடிய ஆட்சி. சரி உணவு இல்லை என்றால் நிம் மதியாகவாவது தூங்கலாம், இருக்கலாம் என்று நினைத்தால் அதற்குக்கூட வழியில்லாத ஒரு ஆட்சி. இதில் நீங்கள் தாய்மாமன் சீர், அண்ணன் சீர் என்று வழங்குகிறீர்களே

நான் ஒன்றை மட்டும் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். குழந்தைகளுக்கு நீங் கள் மோதிரம் எல்லாம் போட வேண்டாம். அந் தக் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

அண்ணன் சீரில் புடவை உட்பட என்னென் னவோ பொருட்களை கொடுக்கும் விஜய் அவர் களே! நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன் தயவு செய்து ‘பெப்பர் ஸ்ப்ரே’ கொடுங்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு பெண் ணுக்கும் தயவு செய்து இதையாவது கொடுங்கள்!

உங்களுடைய போலீஸ், உங்கள் படை இவையெல்லாம் வந்து நீங்கள் யாரையும் காப் பாற்றப் போறதில்லை. அதனால் எங்களுடைய சகோதரிகள் ஒவ்வொருவர் கையிலையும் ரேஷன் கடைகள் வழியாக பெப்பர் ஸ்ப்ரேயை யாவது கொடுங்கள். இந்தத் துப்பில்லாத, வக் கில்லாத ஆட்சியில் அதுவாவது எங்களை காப் பாற்றட்டும்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.